# சென்னை குடிநீர் வாரியம்

**செய்தி வெளியீடு எண்.32** நாள் : 29.11.2021

## களப்பணியாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மேற்கொள்ளும்

## மாண்புமிகு தேசிய தூய்மைப் பணியாளர் மறுவாழ்வு ஆணையத் தலைவர் திரு. மா. வெங்கடேசன் அவர்கள் தகவல்

மாண்புமிகு தேசிய தூய்மைப் பணியாளர் மறுவாழ்வு ஆணையத் தலைவர் திரு. மா. வெங்கடேசன் அவர்கள் தலைமையில் சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.சி.விஜயகுமார், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் களப்பணியாளர்களின் நலன் குறித்த ஆய்வுக் கூட்டம் 29.11.2021 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு தேசிய தூய்மைப் பணியாளர் மறுவாழ்வு ஆணையத் தலைவர் திரு. மா. வெங்கடேசன் அவர்கள் இக்கூட்டத்தில் பேசியதாவது:-

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய களப்பணியாளர்களின் மறுவாழ்வு நலன் குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள், செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகள் குறித்தும், பணிப்பாதுகாப்பு உபகரணங்கள் குறித்தும் சென்னைக் குடிநீர் வாரியம் உரிய இடைவெளியில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து களப்பணியாளர்களையும் பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தும் நிலையினை, சென்னைக் குடிநீர் வாரியம் உறுதி செய்து களப்பணியாளர்களின் நலனில் அக்கறையோடு இருக்க வேண்டும். மேலும், உரிய கால இடைவெளியில் களப்பணியாளர்களுக்கான மருத்துவ முகாம் நடத்தப்பட்டு உயர் சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு உடனடியாக உயர் சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாண்புமிகு உச்சநீதிமன்றம் கழிவுநீர் அகற்றும் பணிகளில் மனிதர்களை ஈடுபடுத்தக் கூடாது என உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவையும் மீறி யாராவது மனிதர்களைக் கொண்டு கழிவுநீர் அகற்றும் பணிகளை மேற்கொண்டால் பொதுமக்கள் உடனடியாக "சஃபாய் மித்ரா சுரக்க்ஷா சேலஞ்ச்" திட்டத்தின் கீழ் துவங்கப்பட்ட தேசிய உதவி எண்.14420-ல் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். இது தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்திட குடிநீர் வாரியம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்.

முன்னதாக, தேசிய துப்புரவுப் பணியாளர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக தாட்கோ மூலம் 9 பயனாளிகளுக்கு பருவக் கடனாக ரூ.40,56,300/-க்கான (ரூபாய் நாற்பது இலட்சத்து ஐம்பத்தாயிரத்து முந்நூறு மட்டும்) காசோலையினை மாண்புமிகு தேசிய தூய்மைப் பணியாளர் மறுவாழ்வு ஆணையத் தலைவர் திரு. மா. வெங்கடேசன் அவர்கள் வழங்கினார். மேலும், கழிவுநீர் அகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து வகையான வாகனங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொண்டு பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் களப்பணியாளர்கள் அணிவதற்கு வேண்டிய பாதுகாப்பான உபகரணங்கள் தொடர்பான கண்காட்சியினை பார்வையிட்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சென்னைக் குடிநீர் வாரிய செயல் இயக்குநர் திரு.பி.ஆகாஷ், இ.ஆ.ப. அவர்கள், பொறியியல் இயக்குநர் திரு. கே. மதுரைநாயகம் அவர்கள், நிதி இயக்குநர் திரு.கே.முத்துகுமாரசாமி அவர்கள், பொது மேலாளர் திரு.இரா.இராஜகிருபாகரன் அவர்கள், தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்
சென்னைக் குடிநீர் வாரியம்